விழுப்புரம் மாவட்டத்தில் அதிமுக தோல்விக்கு சி.வி.சண்முகமே காரணம்

அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி குற்றச்சாட்டு

ஆரணி, ஜூன் 15: விழுப்புரம் மாவட்டத்தில் அதிமுக தோல்வியடைய சி.வி.சண்முகமே காரணம் என்று முன்னாள் அமைச்சரும், அதிமுக கொறடாவுமான அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி குற்றஞ்சாட்டினார்.

அதிமுக அதிருப்தி எம்எல்ஏ சி.வி.சண்முகம், திண்டிவனத்தில் ஞாயிற்றுக்கிழமை பேட்டியளித்தபோது, கட்சித் தலைமைக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார். அதிமுக தொடர் தோல்விக்கு பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமிதான் காரணம் எனக் குற்றஞ்சாட்டிய அவர், பொதுக் குழுவை உடனடியாக கூட்ட வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்நிலையில், திருவண்ணாமலையில் திங்கள்கிழமை அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக தலைமை முதல் தொண்டர் வரை யாரும் திமுகவுக்கு ஆதரவாக செயல்படவில்லை என்பதை சி.வி. சண்முகம் உணர வேண்டும். தவெக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மதுராந்தகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கூட திமுகவுடன் அதிமுக இணைந்து ஆட்சி அமைக்க முயற்சித்ததாக தவறான கருத்தை கூறியுள்ளார். ஆதவ் அர்ஜுனா தனது தவறை திருத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அதிமுக தொண்டர்கள் கொதித்தெழுவார்கள்.

யார் காரணம்?: வட மாவட்டங்களில் வலுவான கட்சியான பாமகவை அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமிதான் கூட்டணியில் இணைத்தார். சட்டப் பேரவைத் தேர்தலில் விழுப்புரம் மாவட்டத்தில் சி.வி.சண்முகம் மட்டுமே வெற்றி பெற்றார். அவர் பரிந்துரை செய்தவர்களைத் தான் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி வேட்பாளர்களாக அறிவித்தார். அவர்கள் யாரும் வெற்றி பெறவில்லை. விழுப்புரம் மாவட்டத்தில் அதிமுக தோல்விக்கு சி.வி.சண்முகமே காரணம்.

நாவடக்கம் தேவை: அவருக்கு அதிமுக அமைப்புச் செயலர், மாநிலங்களவை உறுப்பினர், அமைச்சர் ஆகிய பதவிகளை வழங்கியவர் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமிதான். சி.வி.சண்முகம் நாவடக்கத்தோடு பேசவேண்டும். கட்சியில் விழுப்புரம் மாவட்டம் தனது கையை விட்டுப் போனதால் பொறுத்துக் கொள்ள முடியாத அவர் தேவையில்லாத வதந்திகளை பரப்பி வருகிறார். அவர் திருந்திக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் அனைத்து தொகுதிகளின் நிர்வாகிகளை நேரில் அழைத்து கருத்துக் கேட்ட பிறகு தான் அதிமுக செயற்குழுக் கூட்டமோ அல்லது பொதுக்குழு கூட்டமோ நடத்தப்படும் என்றார் அவர்.

பேட்டியின் போது, எம்எல்ஏக்கள் எஸ்.ராமச்சந்திரன் (கீழ் பென்னாத்தூர்), வேலு (செங்கம்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களுக்கு திங்கள்கிழமை பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி எம்எல்ஏ.

பயிற்றுநர்கள் பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு

விழுப்புரம், ஜூன் 15: விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பயிற்றுநர்கள் பணிக்குத் தகுதி வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வப் பயிலும் வட்டத்தின் மூலமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ரயில்வே தேர்வு வாரியம், பணியாளர்கள் தேர்வுக்குழு, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நடத்தடும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் தேர்வாளர்கள் பயன்பெறும் வகையில், இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த பயிற்சி வகுப்புகளை நடத்த பயிற்றுநர் மதிப்பீட்டுக் குழு மூலமாக தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். பயிற்றுநர்களுக்கு அரசு விதிகளின்படி மதிப்பூதியம் வழங்கப்படும். எனவே, விழுப்புரம் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த விருப்பமுள்ள பயிற்றுநர்கள், ஜூன் 18-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தங்களுடைய முழு விவரத்துடன் கூடிய விண்ணப்பத்தை கல்விச் சான்றுகளின் நகலுடன் இணைத்து நேரில் சமர்ப்பிக்கலாம். மேலும், விவரங்களுக்கு 04146-226417 மற்றும் 9499055906 என்ற கைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

சீமைக் கருவேல மரங்களை அகற்ற கோரிக்கை

சீமைக் கருவேலமரங்களை அகற்ற நடவடிக்கை வேண்டி, விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்த இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியினர்.

விழுப்புரம், ஜூன் 15: விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகள் மற்றும் கிராம பகுதிகளில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டி விழுப்புரம் ஆட்சியருக்கு திங்கள்கிழமை கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இது குறித்து, அக் கட்சியின் மாவட்ட துணைச் செயலர் சி. ராஜூ மற்றும் நிர்வாகிகள் அளித்துள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது: விழுப்புரம் மாவட்டத்தில் ஏரிகள், குளங்கள் மற்றும் பிற நீர் நிலைகள், பொது இடங்கள், கிராமப் பகுதிகளில் சீமைக் கருவேல மரங்கள் வளர்ந்து நிற்கின்றன. இந்த மரங்களால் நிலத்தடி நீர்மட்டம் குறைவதுடன், சுற்றுப்புறச் சூழலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, மாவட்டத்தில் ஏரிகள், குளங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதற்கு ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடகுக் கடையில் திருடப்பட்ட 42 பவுன் தங்கம், 7.5 கிலோ வெள்ளி பறிமுதல்

பெண்கள் உள்பட 4 பேர் கைது

கள்ளக்குறிச்சி, ஜூன் 15: கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் அடகுக் கடையில் திருடப்பட்ட 42 பவுன் தங்க நகைகள், 7.5 கிலோ வெள்ளி பொருள்களை கைப்பற்றி, பெண்கள் உள்பட 4 பேரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

தியாகதுருகம் பேருந்து நிலையம் அருகே கடந்த 30 ஆண்டுகளாக அடகுக் கடை நடத்தி வருபவர் கோ.ராமச்சந்திரன் (55). இவர் வெள்ளிக்கிமை இரவு வழக்கம் போல் கடையை மூடிவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளார். சனிக்கிழமை காலை 6 மணிக்கு கடைக்கு வந்து பார்த்த போது, கடை கதவின் முன் புதிதாக பதாகைகள் இருந்ததும், கடையின் முன் பக்க இரும்பு கிரில் கதவிலிருந்த பூட்டு உடைக்கப்பட்டு கிடந்ததையும் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

பின்னர் கடையின் உள்ளே சென்று பார்த்தபோது அடகுப் பொருள்கள் வைக்கும் பாதுகாப்பு அறை கதவின் பூட்டும் உடைக்கப்பட்டு, இரும்பு பீரோவிலிருந்த 42 பவுன் தங்க நகைகள், 7.5 கிலோ வெள்ளி பொருள்கள், பணப்பெட்டியில் இருந்த ரூ.5 ஆயிரம் ஆகியவற்றை மர்ம நபர்கள் திருடிச் சென்றிருந்ததும் அவருக்கு தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் தியாகதுருகம் போலீஸார் வழக்குப் பதிந்து, தனிப்படை அமைத்து மர்ம நபர்களைத் தேடிவந்தனர். கடையிலிருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்ததில், 3 பெண்கள், இளைஞர் உள்ளிட்ட நான்கு பேர் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. அவர்களின் கைப்பேசி சிக்னல்கள் மூலம் தேடிப் பார்த்ததில் 3 பேர் ஈரோடு மாவட்டம், பெருந்துறை பகுதியில் இருப்பதாகவும், ஒருவர் தஞ்சாவூர் மாவட்டம், கல்லிச்சேரி பகுதியில் இருப்பதாகவும் தெரியவந்தது.

இதையடுத்து, தனிப்படை போலீஸார் பெருந்துறையில் ஒரே வீட்டில் இருந்த கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டத்துக்குள்பட்ட முனிவாழை கிராமத்தைச் சேர்ந்த ப.பவானி (25), மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தாமரைப்பட்டி பள்ளிவாசல் சாலைப் பகுதியைச் சேர்ந்த சி.சகிதாபேகம் (31), தஞ்சாவூர் மாவட்டம், கள்ளிச்சேரி கிராமத்தைச் சேர்ந்த ரா.விஷால் (20), தஞ்சாவூர் மாவட்டம், நல்லிச்சேரி கிராமத்தைச் சேர்ந்த பெண் இளஞ்சிறார் எனத் தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 4 பேரையும் கைது செய்த தியாகதுருகம் போலீஸார், அவர்களிடமிருந்த 42 பவுன் தங்க நகைகள், 7.5 கிலோ வெள்ளிப் பொருள்களையும் பறிமுதல் செய்தனர்.

பின்னர், கைது செய்யப்பட்ட மூவரையும் கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, விஷாலை விழுப்புரம் வேடம்பட்டு மாவட்ட சிறையிலும், பவானி, சகிதா பேகத்தை விழுப்புரம் மகளிர் சிறையிலும், பெண் இளஞ்சிறாரை கடலூர் அரசு கூர்நோக்கு இல்லத்திலும் அடைத்தனர்.

தியாகதுருகம் அடகுக் கடையில் திருடிய நகைகளுடன், கைது செய்யப்பட்ட விஷால், சகிதா பேகம், பவானி.

மணலூர்பேட்டை நூலகத்தில் உலக காற்று தினம்

விழுப்புரம், ஜூன் 15: கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை கிளை நூலகத்தில் உலக காற்று தினம் திங்கள்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது (படம்).

மணலூர்பேட்டை கிளை நூலகமும், அரிமா சங்கமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சிக்கு அரிமா சங்கத் தலைவர் எம்.கே.திருமால் தலைமை வகித்தார். சங்கத்தின் மாவட்டத் தலைவர்கள் த.முருகன், எஸ்.செந்தில்குமார், ஆ.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரிமா சங்க மாவட்டத் தலைவர் அம்மு ரவிச்சந்திரன் கிளை நூலக வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து, பேசினார்.

சமூக முன்னேற்றத்தில் அரிமா சங்கங்களின் சேவைகள் குறித்து கவிஞர் சிங்கார உதியன் பேசினார். காற்று தினம் கொண்டாடுவதன் நோக்கம் குறித்து அரிமா சங்க நிர்வாகிகள், நூலகர்கள் மு.சாந்தி, ச.தேவி ஆகியோர் பேசினர். இதில், முருக்கம்பாடி வல்லரசு, நூலகர் மு.அன்பழகன், பணியாளர் கி.பாஸ்கரன் மற்றும் சமூக ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

ஏரியில் மூழ்கி மூதாட்டி உயிரிழப்பு

விழுப்புரம், ஜூன் 15: விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் அருகே ஏரியில் மூழ்கி மூதாட்டி உயிரிழந்தார்.

கண்டாச்சிபுரம் வட்டம், அந்திலி, குளத்து மேட்டுத் தெருவைச் சேர்ந்தவர் மு.வள்ளியம்மை(75). இவர், தனது மகன் ஏழுமலை பராமரிப்பில் இருந்து வந்தார். வள்ளியம்மை திங்கள்கிழமை அரகண்டநல்லூர் ஏரிக்குச் சென்றுள்ளார். அப்போது தண்ணீரில் காலை நனைப்பதற்காக ஏரியில் இறங்கியபோது, நீரில் மூழ்கி உயிரிழந்து விட்டாராம்.

இதுகுறித்த புகாரின் பேரில் அரகண்டநல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து, விசாரிக்கின்றனர்.

SASVITHA HOME FINANCE

சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்
சத்குரு காம்ப்ளெக்ஸ், முதல் தளம், எண்.640, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600035

அசையா சொத்துக்கள் சுவாதீன அறிவிப்பு Rule - 8(1)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002)-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் (இனி நிறுவனம் என்றழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(2) பிரிவின் விதி 3-ன்படி **கீழே குறிப்பிட்ட தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள், சக-கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் / சக-கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின்படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 12.06.2026 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர்களோ, சக-கடன்தாரர்களோ, ஜாமீன்தாரர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்-க்கு வந்து சேரவேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டிக்கும், இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (அடுபெற்ற சொத்து).

வ.எண்.1: (விழுப்புரம் கிளை) கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr.மாயவன் E, 2.Mrs.செல்வி மாயவன், இருவரது முகவரி: எண்.1/37, வடக்கு தெரு, எடத்தனூர் காலனி, சங்கராபுரம், விழுப்புரம், தமிழ்நாடு-605 802; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 23.03.2026; [Home Loan - Loan A/c No. 1182010100025] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 17.03.2026** அன்றுள்ளபடி ₹ **10,43,141/-** (ரூபாய் பத்து லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து நூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) மற்றும் 18.03.2026 முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: விழுப்புரம் பதிவு மாவட்டம், மணலூர்பேட்டை சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட, SR எண்.17/3-ல் பரப்பு 0.13.0 ஏர்ஸ், **இதில் எடத்தனூர் கிராமம், சிவிலிநத்தியம் பஞ்சாயத்து யூனியன்** என்னும் முகவரியில் உள்ள **1308 சதுர அடி அல்லது 121.52 சதுர மீட்டர் அல்லது 3 செண்ட்** (UDR சர்வே எண்.17/3L, 0.01.21) எல்லைகள்: வெங்கடேசன் சொத்துக்கு தெற்கு, ரோட்டுக்கு வடக்கு, நல்லதம்பி சொத்துக்கு மேற்கு, வெங்கடேசன் மனைக்கு கிழக்கு.

வ.எண்.2: (விழுப்புரம் கிளை) கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr.ஏழுமலை K, 2.Mrs.மாரியம்மாள் E, இருவரது முகவரி: எண்.63/3, அம்பேத்கர் நகர், மேல்கொண்டை, விழுப்புரம், தமிழ்நாடு-605 652; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 03.04.2026; [Home Loan - Loan A/c No. 1182010100055] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 27.03.2026** அன்றுள்ளபடி ₹**8,08,966/-** (ரூபாய் எட்டு லட்சத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தாறு மட்டும்) மற்றும் 28.03.2026 முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: விழுப்புரம் பதிவு மாவட்டம், விக்கிரவாண்டி சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட, நத்தம் SR எண்.224/24, **R.C. காலனி, மேல்கொண்டை கிராமம், விக்கிரவாண்டி டவுன் பஞ்சாயத்து** என்னும் முகவரியில் உள்ள **மொத்த பரப்பு 893 சதுர அடி - 00083 சதுர மீட்டர்,** எல்லைகள்: வீரமுத்தின் மனைக்கு தெற்கு, போர்கிலா மனைக்கு வடக்கு, ரோடுக்கு மேற்கு, ஆனந்தியின் மனைக்கு கிழக்கு.

வ.எண்.3: (விழுப்புரம் கிளை) கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr.தனசேகரன் K, 2.Mrs.ராஜேஸ்வரி D, இருவரது முகவரி: எண்.12/233, இந்திரா நகர், இளவனாசூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், தமிழ்நாடு-607 202; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.03.2026; [Home Loan - Loan A/c No. 1182010100046] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 24.03.2026** அன்றுள்ளபடி ₹11,34,825/- (ரூபாய் பதினொரு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து மட்டும்) மற்றும் 25.03.2026 முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டம், இளவனாசூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்கள் 90/2 மற்றும் 90/5 மற்றும் புதிய சர்வே எண்.90/5A1B, **மனை எண்.38, N.S.நகர், A.புதூர் கிராமம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 35 அடி, தெற்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 55 அடி, கிழக்கு பக்கம் 56 அடி, **ஆக மொத்தம் 1803¾ சதுர அடி,** எல்லைகள்: தெருவுக்கு கிழக்கு, தெருவுக்கு வடக்கு, மனை எண்.30-க்கு தெற்கு, மனை எண்.37-க்கு மேற்கு.

வ.எண்.4: (பண்ருட்டி கிளை) கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr.அய்யனார் K, 2.Mrs.விமலாதேவி I, இருவரது முகவரி: எண்.27, மாரியம்மன் கோயில் தெரு, புதுப்பேட் அஞ்சல், மெட்டமேடு, தொரபாடி, கடலூர், தமிழ்நாடு-607 108; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 10.03.2026; [Home Loan - Loan A/c Nos. 1152010600047, 1152011000134 & 1152031300107] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 27.02.2026** அன்றுள்ளபடி ₹18,24,490/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து இருபத்து நான்காயிரத்து நானூற்று தொண்ணூறு மட்டும்) மற்றும் 28.02.2026 முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம் மற்றும் புதுப்பேட்டை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **பண்ருட்டி தாலுகா, தொரபாடி** கிராமத்தில் புஞ்சை சர்வே புதிய எண்.16/1-ல் உள்ள பரப்பு 0.95.0 ஹெக்டேர், தற்போதைய சப் டிவிஷன் எண்.16/1A-ல் மொத்தமுள்ள 0.56.0 ஹெக்டேர் நிலத்தில் சுபித்திய சப் டிவிஷன் எண்.16/9-ல் உள்ள 0.01.52 ஹெக்டேர் புஞ்சை நிலம். பழைய சர்வே எண்.40-ல் உள்ள பரப்பு 2.30 ஏக்கர், இதில் 1.30 ஏக்கர் 00100 சதுர அடி நிலமானது **சிவசக்தி நகர்** லேஅவுட்டாக உருவாக்கப்பட்டு இதில் **மனை எண்.30-ல்** கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 56 அடி மற்றும் வடக்கு பக்கம் 63 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 30 அடி மற்றும் மேற்கு பக்கம் 27 அடி, **ஆக மொத்தம் 1695 சதுர அடி அல்லது 157.59 சதுர மீட்டர் காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், எல்லைகள்: மேற்கு: 20 அடி லேஅவுட் ரோடு, வடக்கு: புஷ்பாவின் மனை, தெற்கு: மனை எண்.39, கிழக்கு: கருணாகரனின் மனை.

வ.எண்.5: (பண்ருட்டி கிளை) கடன்தாரர் / சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: 1.Mr.அஜித்குமார் B, 2.Mr.பூபதி, 3.Mrs.வாசுகி, அனைவரது முகவரி: எண்.468, பிள்ளையார்கோயில் தெரு, நடுக்காட்டுப்பாளையம், கீழிருப்பு, கடலூர், தமிழ்நாடு-607 103; **கோரிக்கை அறிவிப்பு தேதி: 10.03.2026; [Home Loan - Loan A/c No. 1152031300042] கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: 04.03.2026** அன்றுள்ளபடி ₹4,67,357/- (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்தேழாயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஏழு மட்டும்) மற்றும் 05.03.2026 முதல் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்.

அசையா சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம் மற்றும் காடாம்புலியூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **பண்ருட்டி தாலுகா, கீழிருப்பு கிராமத்தில்** புஞ்சை R.S.புதிய சர்வே எண்.227/8-ல் உள்ள பரப்பு 0.60.0 ஹெக்டேர், தற்போதைய சப் டிவிஷன் எண்.227/8B4-ல் பரப்பு 0.04.29 ஹெக்டேர், பழைய சர்வே எண்.198-ல் மொத்தமுள்ள 2.00 ஏக்கர் பரப்பில் 0.09½ ஏக்கர் நிலத்தில் உள்ள **2125½ சதுர அடி அல்லது 197.54 சதுர மீட்டர் காலி மனை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மேற்கு: பஞ்சாயத்து ரோடு, கிழக்கு: சுப்பிரமணியனின் மனை, வடக்கு: கோவிந்தனின் மனை, தெற்கு: காட்டுராஜாவின் மனை.

தேதி: 12.06.2026
இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

பெயர் மாற்றம்

B. RESHMA, த/பெ. SYED BILAL, எண். 59/24, மணியாரி தெரு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம்–606601, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி B. RESHMA, த/பெ. BILAL. என்று அழைக்கப்படுவேன்.

– B. RESHMA, த/பெ. SYED BILAL

CHANGE OF NAME

I, CHANDRAVADIVU VENKATESAN, W/o. VENKATESAN (Date of Birth: 21/06/1981) Residing At No.916, Mela Street, Aranthangi, Karunakaranallur, Kattumannarkoil Taluk, Cuddalore District, Tamil Nadu, Pin No: 608301, shall henceforth be known and called as **CHANDRAVADIVU SUNDARAMOORTHY.**

- Chandravadivu Venkatesan
W/o. Venkatesan

CHANGE OF NAME & D.O.B

I, **S.TAMILARASI,** W/o. Army No. 14576937X EX NAIK **CHARLOT N,** aged about 55 years, residing at No. 17, Market Street, Orleanpet, Nellithoppe, Puducherry – 605 005, state that my name is erroneously entered as **S.TAMILARASI** and my Date of Birth entered as **15.05.1969** in my husband Discharge Book and SPARSH PPO No. 204200501567 issued by the PCDA (Pension) Allahabad. My correct name is **C TAMIJARASSY** and My Correct Date of Birth is **15.05.1970** as mentioned in all civil Records.

- S.TAMILARASI

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
2வது தளம், செஞ்சிலுவைக் கட்டிடம், # 32, செஞ்சிலுவைச் சாலை, எழும்பூர், சென்னை 600008
Ph: 044-28881037. E-mail: sbi.05170@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரம்: திரு. ஜிதகம் S.R.L. சுவாமி, கைபேசி: 7810068331 - தொலைபேசி: 044-28881058
நகர வழக்கு அதிகாரியின் பெயர் : முத்துமாரி நிவேதிதா, மொபைல்: 8056144247 தொலைபேசி : 044-28881043

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும் குறிப்பாக கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தினை அதிகாரபூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி அவர்களால் **சுவாதீனத்தில்** எடுத்துக்கொள்ளப்பட்டது. **சென்னை, பாரத ஸ்டேட் வங்கி, SARB கிளைக்கு** கடன்தாரர்(கள்) **M/s.Navasakthi Townships Developers Pvt Ltd** (கடன்தாரர்) மற்றும் ஜாமீன்தாரர்கள் **திரு. மணிரத்தினம் KI** மற்றும் **திருமதி. உஷா மணிரத்தினம்,** ஆகியோர்கள் செலுத்த வேண்டிய **04.06.2026** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 31,45,71,468.27/-** (ரூபாய் முப்பத்து ஒரு கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து எழுபத்து ஒரு ஆயிரத்து நானூற்று அறுபத்து எட்டு மற்றும் பைசா இருபத்து ஏழு மட்டும்) மற்றும் அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள் சேர்த்து வசூலிப்பதற்காக **"உள்ளது உள்ளவாறு", "உள்ள இடத்தில் உள்ளவாறு"** மற்றும் **"உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **04.07.2026** அன்று விற்கப்பட உள்ளது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: M/s.Navasakthi Townships Developers Private Limited, பிரதிநிதியாக அதன் **மேலாண்மை இயக்குநர்,** பாண்டி-கடலூர் (கிழக்கு கடற்கரை சாலை), பெரியகாட்டுப்பாளையம் கிராமம், மத்தளப்பட்டு மதுரா, கடலூர் வட்டம் & மாவட்டம்-605007. **ஜாமீன்தாரர்கள் 1. திரு.K.I.மணிரத்தினம்,** த/பெ. திரு. ஐயாக்கண்ணு, **மேலாண்மை இயக்குநர், M/s.Navasakthi Townships Developers Private Limited,** பாண்டி-கடலூர் (கிழக்கு கடற்கரை சாலை), பெரியகாட்டுப் பாளையம் கிராமம், மத்தலப்பட்டு மதுரா, கடலூர் வட்டம் & மாவட்டம்-605007. **2. திருமதி.M.உஷா,** க/பெ, **திரு.K.I.**மணிரத்தினம், பாண்டி-கடலூர் (கிழக்கு கடற்கரை சாலை), பெரியகாட்டுப் பாளையம் கிராமம், மத்தளப்பட்டு மதுரா, கடலூர் தாலுகா & மாவட்டம்-605007. **மேலும் ஓர் முகவரி** எண்.216/217, 1வது குறுக்குத் தெரு, Angraha Satellite Township, பெரியகாட்டுப்பாளையம் கிராமம், கடலூர் மாவட்டம் - 605007.

அசையா சொத்துக்களின் விவரங்கள்:
பாண்டிச்சேரி, பாகூர், புலியூர் குப்பம் கிராமம், லா பிரான்ஸ் வில்லாவின் விற்பனை மனைகள் எண்கள்: 199

அட்டவணை எண்.1

வகை எண்.	மனை எண்.	சதுர அடி	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வுத் தொகை:
1	199	3600	₹ 52,20,000	₹ 5,22,000	₹ 10,000/-

புதுச்சேரி பதிவு மாவட்டம், பாகூர் சார் பதிவு எல்லைக்கு உட்பட்ட, புதுச்சேரி 607 402 புதுச்சேரி, பாகூர் கொம்யூன், பிள்ளையார்குப்பம் வருவாய் கிராமத்தில் உள்ள சர்வே எண்.118/2 ல் அடங்கிய பிள்ளையார்குப்பம் சாலையில் அமைந்துள்ள லா பிரான்ஸ் வில்லாவில் மேற்குறிப்பிட்டுள்ள குடியிருப்பு மனை அமைந்துள்ளது.

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்; தேதி: **26.06.2026 - காலை 11 மணி முதல் பகல் 1 மணி வரை**

மின் ஏலத் தேதி & நேரம்: **04.07.2026** நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

வங்கிக்குத் தெரிந்தவரை சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை
விருப்பமுள்ள ஏலதாரர்கள், BAANKNET.COM உடன் முன் ஏல டேவணித் தொகையை மின்னணு ஏல முடிவு வரை செலுத்தவும்.
மின் ஏல விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பாரத ஸ்டேட் வங்கி கொடுக்கப்பட்டுள்ள இணையதளமான https://baanknet.com என்ற இணையிப்பில் காணலாம்.

தேதி: 11.06.2026
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB, சென்னை

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
கிளை அலுவலகம்: எண்.25, J J காம்ப்ளெக்ஸ், பண்ருட்டி மெயின் ரோடு, வடலூர், கடலூர், தமிழ்நாடு - 607303					
1.	1638210170000016 / 1. Mr. தேவராஜ் S. 2.Mrs.பூங்குடி D	(i) 29.11.2021 & 26.11.2021 அன்றுள்ளபடி ₹ 7,81,271/- (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்தோராயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 18.04.2022 & நேரடி சுவாதீனம் - 07.06.2025	15.05.2026 அன்றுள்ளபடி ₹13,73,372.14 (ரூபாய் பதிமூன்று லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து முன்னூற்று எழுபத்து இரண்டு மற்றும் பைசா பதினான்கு மட்டும்)	₹ 11,55,000/- (ரூபாய் பதினொன்று லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ 1,15,500/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினைந்தாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சார் பதிவு எல்லைக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து யூனியன் எல்லை, கண்ணாடி மதுரா, **பெரியகண்ணாடி கிராமம், தோப்பு தெரு, கடலூர் மாவட்டம் என்னும் முகவரியில் நத்தம் புதிய சர்வே எண். 102-1-8.01.0 ஏர்ஸ், தற்போது ஒழுங்குமுறை திட்ட மறு சர்வே எண்.178-14-00200 சதுர மீட்டர், பழைய சர்வே எண்கள்.53/ மற்றும் 63/1, பட்டா எண்.144, பரப்பு 0.05 செண்டு (அதாவது) 2180 சதுர அடி நிலம் மற்றும் இதில் செங்கற்கலால் கட்டப்பட்டுள்ள RCC கூரையிட்ட குடியிருப்பு கட்டிடம் (26 X 22 ½ = 585 சதுர அடி),** அதனுடன் மின்சார இணைப்பு எண்.732, பொருத்தப்பட்டுள்ளவைகள், டேபாசிட்டுகள், அதனுடன் அனைத்து உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், எல்லைகள்: தோப்பு தெருவுக்கு கிழக்கு, S.தேவராஜ் மனைக்கு மேற்கு, ராதாகிருஷ்ணன் வீட்டு மனைக்கு வடக்கு, சிவநாதம் வீட்டு மனைக்கு தெற்கு.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
கிளை அலுவலகம்: எண்.23, தரைத்தளம் & முதல் தளம், வார்டு எண்.3, ஹாஸ்பிட்டல் ரோடு, காந்தி நகர், மயிலாடுதுறை, தமிழ்நாடு-609001					
2.	1642210090000006 / 1.M/s.பாலாஜி டெக்ஸ் கிளிக்ஸ் 2.Mr.K.பாலாஜி, 3.Mr.M.கவியபெருமாள்	(i) 07.09.2022 & 01.09.2022 அன்றுள்ளபடி ₹ 30,16,786/- (ரூபாய் முப்பது லட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.02.2023 & நேரடி சுவாதீனம் - 23.08.2025	19.05.2026 அன்றுள்ளபடி ₹45,54,986.99 (ரூபாய் நாற்பத்து ஐந்து லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஆறு மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்பது மட்டும்)	₹ 28,36,500/- (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து முப்பத்து ஆறாயிரத்து ஐநூறு மட்டும்)	₹ 2,83,650/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்)

சொத்து விவரம்: புதுச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் காரைக்கால் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பட்டா எண்.486(N), பழைய சர்வே எண்.1041 பகுதி, மறு சர்வே எண்.104/69 (புதிய சப் டிவிஷன் மறு சர்வே எண்.104/69/A/1/A/4, 13, கொட்டுச்சேரி கிராமம், மனை எண்.10, புது தெரு, புது நகர், மங்களா நகர், கொட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து என்னும் முகவரியில் தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 20.80 மீட்டர், மேற்கு பக்கம் 17.40 மீட்டர், கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 11.00 மீட்டர், தெற்கு பக்கம் 11.80 மீட்டர், ஆக மொத்தம் 218 சதுர மீட்டர் அல்லது 2346 சதுர அடி நிலம் மற்றும் RCC கூரைப்போட்ட கட்டிடம். எல்லைகள்: 6.10 மீட்டர் பொது வழிப்பாதைக்கு தெற்கு, மனை எண்.11-க்கு மேற்கு, R.S.எண்.104/70-ல் உள்ள சொத்துக்கு வடக்கு, மனை எண்.9-க்கு கிழக்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 04.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **03.07.2026** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **02.07.2026** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ ஷாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 16.06.2026
ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!